Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
THURSDAY, JULY 18, 2024

வியாழக்கிழமை ஜூலை 18, 2024 | ஒளி: 10 கதிர்: 297 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE



‘பிரெஸ்டீஜ் பால்கன்’ கவிழ்ந்ததில்

# இலங்கையர் மூவர் மாயம்

■ மொத்தமாக 16 பேரை தேடும் பணிகள் தீவிரம்

ஓமன் கடலில் எண்ணெய் டேங்கர் கப்பல் ஒன்று கவிழ்ந்துள்ளது. அந்த கப்பலில் பணியாற்றிய 16 பேர் மாயமாகியுள்ள நிலையில், அதில் இலங்கையர்கள் மூவரும், இந்தியர்கள் 13 பேரும் காணாமல் போயுள்ளனர். அவர்களை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

ஓமன் நாட்டின் கடல் பகுதியில், கொமரோஸ் நாட்டுக் கொடி கொண்ட எண்ணெய்க் கப்பல் கவிழ்ந்துள்ளது. அந்த கப்பலில் பணிபுரிந்த 16 பேரை காணவில்லை என்று, மூழ்கியதாக அறிவிக்கப்பட்ட ஒரு நாளுக்குப் பிறகு, ஓமன் கடல் பாதுகாப்பு மையம் தெரிவித்துள்ளது.

‘பிரெஸ்டீஜ் பால்கன்’ எனும் இந்த டேங்கரில் இலங்கையைச் சேர்ந்த 3 பேர் மற்றும் இந்தியாவைச் சேர்ந்த 13 பேர் பணியாற்றி உள்ளனர். ராஸ் மத்ரகாவில் இருந்து தென்கிழக்கே சுமார் 25 கடல் மைல் தொலைவில் ஓமனின் டுக்ம் துறைமுகத்துக்கு அருகே கப்பல் திங்கட்கிழமை (15) அன்று கவிழ்ந்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.

தொடர்ச்சி P2



## சிவப்பு எச்சரிக்கை

பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை அறிவித்தலை விடுத்துள்ளது.

அரபிக்கடல்,வங்காள விரிகுடா கடற்பரப்புகளில் பயணிக்கும் பல நாள் மீன்பிடி படகுகள் மற்றும் கடல்சார் சமூகத்தினர் இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இயங்குநிலை தென்மேற்கு பருவமழை காரணமாக, அரபிக் கடல், வங்காள விரிகுடாவில் மிகப் பலத்த காற்று வீசக்கூடும். கடல் மிகவும் கொந்தளிப்பாக இருக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## “உள்ளவரே இருப்பார்”

■ நிதர்ஷன் வினோத்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் ‘தற்போது உள்ளவரே’ என சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் புதன்கிழமை (17) இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களின் கேள்விக்குப் பதிலளித்தபோதே சுகாதார அமைச்சர் இதனை குறிப்பிட்டார்.



சாவகச்சேரி வைத்தியசாலையில் தற்பொழுது நியமனம் பெற்று கடமையில் இருக்கும் அதிகாரியே வைத்தியசாலையின் தற்போதைய பதில் வைத்திய அத்தியட்சகர் என அமைச்சர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “சு.கவில் இருந்தும் ஜனாதிபதி வேட்பாளர்”

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதை ஒத்திவைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டால் நாட்டில் இரத்தக்களரி ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில், செவ்வாய்க்கிழமை (16) இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.



## “ரணிலோ, தம்மிக்கவோ கட்சிக்கு அறிவிக்கவில்லை”

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவோ அல்லது தொழிலதிபர் தம்மிக்க பெரேராவோ அல்லது வேறு எவரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளதாகக் கட்சிக்கு அறிவிக்கவில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் யார் போட்டியிடுவது என்பது தொடர்பில் ஊடகவியலாளர்கள் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

## “ஜனாதிபதித் தேர்தலை பிற்போட வேண்டாம்”

எந்தவொரு காரணத்திற்காகவும் ஜனாதிபதி தேர்தலை பிற்போடாது உரிய நேரத்தில் நடத்துமாறு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்ததாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொது செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் செவ்வாய்க்கிழமை (16) நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.



தொடர்ச்சி P2

22ஆவது திருத்தத்துக்கு

## “கருத்துக்கணிப்பை நடத்த வேண்டும்”

### சூழ்நிலை ஏற்படும் என்கிறது சட்டத்தரணிகள் ஒன்றிணைவு

அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள 22ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் நிறைவேற்றப்பட்டாலும் மக்கள் கருத்துக்கணிப்பை நடத்த வேண்டுமெனத் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்க வேண்டிய சூழ்நிலை ஜனாதிபதிக்கு உருவாகுமென சட்டத்தரணிகள் ஒன்றிணைவு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி அதிரடியாக குழுவை நியமித்தார்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களினதும் முன்னாள் ஜனாதிபதிகளினதும் பிரத்தியேக பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காகக் குழுவொன்றை நியமிக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அத்தகைய சகல பாதுகாப்பு நடவடிக்கைகளையும் ஒருங்கிணைப்பதற்கும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமிப்பதற்கும் பரிந்துரைத்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## “சதி முடிச்சால் மீற முடியாது”

தங்கள் பேராசை பிடித்த வாழ்க்கை முறையைத் தக்க வைத்துக் கொள்ள நாட்டையும், ஜனநாயகத்தையும், அரசியலமைப்பையும் விற்கத் தயாரான ஆட்சியாளர்களும் இன்று இருக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டிய எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச, சதி முயற்சியால் அரசியலமைப்பை மீற முடியாது என்றும் தெரிவித்தார்.

சமூகமும், உலகமும் எப்போதும் போட்டித்தன்மை கொண்டவையாகும். எப்போதும் போட்டி நிலவிக்கொண்டே இருக்கும். இதைக் கையாளக்கூடிய ஸ்மார்ட் குடிமக்களை



உருவாக்க வேண்டும் என்றார். பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத் திட்டத்தின் திம்புலாகல, அரலகங்வில,

தொடர்ச்சி P2

## ‘எல் போர்டு’ கட்சிகளுக்கு எதிர்காலத்தில் வாய்ப்பு

‘எல் போர்டு’ அரசியல் கட்சிகளுக்கு ஒரு நாட்டை ஆட்சி செய்வதற்கான வாய்ப்பு எதிர்காலத்தில் எப்போதாவது வழங்க முடியும், இந்த நிமிட ஆட்சியைக் கொண்டு நடத்தக்கூடிய அனுபவங்கள், ரணில் விக்ரமசிங்கவுக்கு மட்டும் தான் நிரம்பி இருக்கிறது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றத் தலைவர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## மெல்சிறிபுர பஸ்கள் விபத்தில் சாரதி மரணம்; 8 பேர் காயம்

மெல்சிறிபுர-பன்லியத்த பிரதேசத்தில் இரண்டு சொகுசு பஸ்கள் மோதியதில் பாரிய விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த விபத்து புதன்கிழமை (17) அதிகாலை 2.00 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக மல்சிறிபுர பொலிஸார் தெரிவித்தனர்.



தொடர்ச்சி P2


ஹெலிகொப்டர்களில்

## மஹிந்த, மைத்திரி 1,535 தடவைகள் பறந்தனர்

முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் ஜனாதிபதியின் சிறப்புரிமையைப் பயன்படுத்தி, விமானப்படை ஹெலிகொப்டர்களில் 1,535 தடவைகள் பயணங்களை மேற்கொண்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2005 மற்றும் 2015க்கு இடையில் விமானப்படை ஹெலிகொப்டர்களைப் பயன்படுத்தி 978 தடவைகள் பயணங்களை, தனது 11 ஆண்டுகள் பதவிக்காலத்தில் மேற்கொண்டுள்ளார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்



'பிரெஸ்டீஜ் பால்கன்' கவிழ்ந்ததில்

# இலங்கையர் மூவர் மாயம்

எனினும், கடலில் எண்ணெய் கசிவு குறித்த எந்த தகவலும் இன்னும் உறுதி செய்யப்படாமல் உள்ளது.

'பிரெஸ்டீஜ் பால்கன்' என்பது 2007இல் கட்டப்பட்ட 117 மீட்டர் நீளமுள்ள எண்ணெய் தயாரிப்பு டேங்கர் கப்பலாகும்.

இத்தகைய சிறிய டேங்கர்கள் பொதுவாகக் குறுகிய கடலோரப் பயணங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. கப்பல் இணையதளத்தின் தகவல்படி, அந்த கப்பல் துபாயில் உள்ள ஹம்ரியா துறைமுகத்தில் இருந்து புறப்பட்டு ஏமன் துறைமுக நகரமான ஏடனை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

கப்பல் கவிழ்ந்துள்ள பகுதியான டுக்ம் துறைமுகம், ஓமன் நாட்டின் தென்மேற்கு கடற்கரையில் அமைந்துள்ளது. இது அந்த நாட்டின் எண்ணெய் மற்றும் எரிவாயு தொழில் சார்ந்த முக்கிய அங்கமாக உள்ளது.



## "உள்ளவரே இருப்பார்"

வடமாகாண சுகாதார திணைக்களத்தால், வைத்தியர் கே.ரஜீவ் புதிய பதில் வைத்திய அத்தியட்சகராக 09ஆம் திகதி நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## "ரணிலோ, தம்மிக்கவோ கட்சிக்கு அறிவிக்கவில்லை"



வேட்பாளர் தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம், உரிய நேரத்தில் வேட்பாளரின் பெயர் அறிவிப்பார் என்றார்.

## "ஜனாதிபதித் தேர்தலை பிற்போட வேண்டாம்"

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ, கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட கட்சியின் பிரதிநிதிகள் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.



## "கருத்துக்கணிப்பை...

அந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு 30 நாட்களுக்குள் மக்கள் கருத்துக்கணிப்பை நடத்த வேண்டிய சூழ்நிலை உருவாகுமென அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனூடாக 2 தேர்தல்களை நடத்த வேண்டிய சுமை இலங்கைக்கு ஏற்படுவதுடன், அது நெருக்கடியான நிலையைத் தோற்றுவிக்குமென சட்டத்தரணிகள் ஒன்றிணைவு எச்சரித்துள்ளது.

மக்கள் கருத்துக்கணிப்பை நடத்துவதற்கு மாத்திரம் பல பில்லியன் ரூபாவை செலவிட நேரிடும் என சுட்டிக்காட்டிய சட்டத்தரணிகள் ஒன்றிணைவு, உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவதற்கு போதுமான நிதி இல்லையென இலங்கை அரசாங்கம் பல தடவைகள் அறிவித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் பாராளுமன்றம் அல்லது ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் வரையறுக்க வேண்டிய அவசர தேவை ஏற்படவில்லை என அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்வைக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு திருத்தம், தேர்தல் முறையை மேலும் நெருக்கடிக்குக் கொண்டுசெல்வதற்கான முயற்சியாகும் என அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**" இலங்கை அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலத்தை சட்டத்தரணிகள் ஒன்றிணைவு நிராகரிப்பதுடன், அது இந்த நாட்டின் தேர்தல் முறையைச் சீர்குலைக்கும் முயற்சியெனவும் சுட்டிக்காட்டியுள்ளது**

ஜனாதிபதி தேர்தலின் பின்னர் பாராளுமன்ற தேர்தலும் நடத்தப்பட வேண்டுமென அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலத்தை சட்டத்தரணிகள் ஒன்றிணைவு நிராகரிப்பதுடன், அது இந்த நாட்டின் தேர்தல் முறையைச் சீர்குலைக்கும் முயற்சியெனவும் சுட்டிக்காட்டியுள்ளது. அனைத்து ஜனநாயக சக்திகளும் இந்த தவறான முயற்சிகளுக்கு எதிராக ஒன்றிணையுமென எதிர்பார்ப்பதாக சட்டத்தரணிகள் ஒன்றிணைவு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

பத்துக்கும் அதிகமான ஜனாதிபதி சட்டத்தரணிகள், பேராசிரியர்கள் உள்ளிட்ட ஏராளமான சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.




## "சதி முடிச்சால் மீற முடியாது"

விலயாய ஆரம்பப் பிரிவுப் பாடசாலைக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு ஜூலை 16 ஆம் திகதி இடம்பெற்றது. அங்கு நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்கள் போட்டித்தன்மையையும் தந்திரம், உத்தி, புத்திசாலித்தனம், மற்றும் அறிவை பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்டாலும், இன்று இந்நாட்டின் தேசிய நலனுக்கும் மக்களுக்கும் எதிராகவே இந்த சதிகள் அனைத்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் மக்களை ஏமாற்றும், அவதானங்களைத் திசை திருப்பும், பொய்யான தகவல்களைப் பரப்பி, நாடு சீரழிந்தாலும் தமது பதவிகளைப் பாதுகாத்துக் கொள்ள தற்போதைய ஆட்சியாளர்கள் தங்களால் இயன்ற அனைத்தையும் செய்து வருகின்றனர் என்றார்.

நாட்டிலும் சமூகத்திலும் நிச்சயமற்ற நிலை, குழப்ப நிலையை ஏற்படுத்தியுள்ளனர். அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம் நடக்க வேண்டியவை நடக்குமா, நடக்காதா என்பது தொடர்பில் நிச்சயமற்ற நிலையை உருவாக்கியுள்ளனர். ஜனநாயகத்தையும் தேசிய தேவைப்பாட்டையும் மறந்து, தங்கள் சொந்த நலவுகளையும், தமது பதவிகளையும் பாதுகாத்துக் கொள்ள பல்வேறு தரப்பினரும் செயற்பட்டு வருவதே இதற்கு காரணமாகும்.

அரசியலமைப்பை அழிக்கவும், அதனை மீறவும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். வங்குரோத்தான நாட்டில் கூட, தெளிவின்மை மூலம் நாடு குழப்பமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. மக்களின் எண்ணங்களுடன் விளையாடி, தவறான புரிதலை ஏற்படுத்தி, நாட்டை குழப்பமடையச் செய்துள்ளனர். எனவே இவ்வாறான பொய்யான தோற்றப்பாடுகளைக் கண்டு மக்கள் ஏமாற வேண்டாம் என வேண்டுகோள் விடுக்கிறேன். நாட்டின் அதியுயர் சட்டமான அரசியலமைப்பை எவராலுமே மீற முடியாது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.



## மெல்சிறிபுர பஸ்கள் விபத்தில் சாரதி மரணம்; 8 பேர் காயம்

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த சொகுசு பஸ்ஸும் கொழும்பில் இருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த சொகுசு பஸ்ஸும் நேருக்கு நேர் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.


இந்த விபத்தில் மட்டக்களப்பு பஸ்ஸின் சாரதி படுகாயமடைந்து பொல்கொல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார். காயமடைந்த 8 பேர், அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என மெல்சிறிபுர பொலிஸார் தெரிவித்தனர்.

## 'எல் போர்டு' கட்சிகளுக்கு எதிர்காலத்தில் வாய்ப்பு

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் ஐக்கிய லக்வனிதா முன்னணியின் கூட்டம், புதன்கிழமை (17) நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே வஜிர அபேவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி எப்பொழுதும் உண்மையைச் சொல்லும் கட்சியாகும், யாராவது பாதையை மாற்றிப் பொய் சொல்வார்கள் என்றால், அவர்களின் வீடுகளுக்குச் சென்று சாப்பாட்டுக்குக் கேட்டுக்கொள்ளும் நிலைமை மக்களுக்கு ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டை பொறுப்பேற்கும் அரசியல் கட்சிகளுக்குப் பொய் சொல்ல முடியாத அளவுக்கு ரணில் விக்ரமசிங்கவால் சட்டங்களில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.



## மஹிந்த, மைத்திரி 1,53...

அத்துடன், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது ஐந்தாண்டு பதவிக் காலத்தில் 557 தடவைகள் பயணித்துள்ளதாக இலங்கை விமானப்படை தலைமையகத்தில் இருந்து பெறப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

விமானப்படைத் தலைமையகம் முதலில் கோரிய தகவல்களை வழங்கத் தவறியதை அடுத்து தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவிடம் எமது சகோதரப் பத்திரிகையான 'ADA' செய்த முறைப்பாட்டுக்குப் பதிலளிக்கும் வகையில் இந்தத் தரவு வெளியிடப்பட்டது.

தகவல் அறியும் உரிமை ஆணையத்தில் செய்யப்பட்ட முறையீட்டின்படி, 04.01.2024 அன்று மேல்முறையீட்டு எண். RTIC/Appeal/398/2023 இன் கீழ் ஆணையம் விமானப்படை தலைமையகத்துக்கு இது தொடர்பான உத்தரவைப் பிறப்பித்தது.

அந்த உத்தரவைத் தொடர்ந்து, 2024 ஜூலை 11, அன்று, கோரப்பட்ட தகவலின் ஒரு பகுதிக்கு மட்டுமே விமானப்படையால் தகவல் வழங்கப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியின் சிறப்புரிமையின் கீழ் தனது 5 வருட காலப்பகுதியில் 557 தடவைகள் விமானத்தில் பயணித்துள்ளார். அவர் மொத்தம் 131,277.17 கிலோமீட்டர் தூரம் பயணித்து உள்ளார்.

ஒப்பீட்டளவில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது பதவிக்காலத்தில் விமானப்படை ஹெலிகாப்டர்களை அதிகளவில் பயன்படுத்தி உள்ளார்.

கிராமம் என்று சொல்லி,

# “குழி தோண்டி புதைக்காதீர்”

பெரும் தோட்டங்களில் வாழும் சுமார் 200,000 குடும்பங்களை, தோட்ட நிர்வாகங்களின் நவீன அடிமைத்துவ பிடிகளில் இருந்து அகற்ற வேண்டும் என்பது தமிழ் முற்போக்கு கூட்டணியின் அரசியல் விஞ்ஞாபனத்தில் அடங்கியுள்ள முன்னணி கோரிக்கையாகும். அதை செய்யுங்கள். அதற்கு கொள்கை ரீதியாக ஆதரவு தருகிறோம். ஆனால், லயன் காம்பராக்கள்தான் புதிய கிராமங்கள் என்று நீங்கள் இன்று கூற முயல்வதை நாம் ஏற்க முடியாது. இனியும் எமது மக்கள் மலை உச்சிகளில் மலைசாதி பழங்குடி மக்கள் போன்று வாழ்வதை நாம் ஏற்க முடியாது என்று மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

மலை நாட்டு புதிய கிராமங்கள் அமைச்சு என்ற பொருளில், பெரும் தோட்டங்களில், காணி உரிமையுடன் கூடிய தனி வீட்டு புதிய கிராமங்களை அமைத்துக் காணி உரிமை கோரிக்கையை, உங்கள் ஆட்சியில், 2015ஆம் ஆண்டு முதல் அரசியல் ரீதியாக ஆரம்பித்து வைத்த கட்சி தமிழ் முற்போக்கு கூட்டணியாகும். கடந்த வருடம், மலையக மக்கள் இந்நாட்டிற்கு வந்த 200 வருடப் பூர்த்தியை அரசியல் கட்சிகளும், தொழில் சங்கங்களும், சிவில் அமைப்புகளும் நினைவு கூர்ந்த நிகழ்வுகளில் மேல் எழுந்த பிரதான கோசம், காணி உரிமை கோரிக்கை ஆகும் என்றும் தெரிவித்தார்.

ஆகவே, லயன் காம்பராக்களை, “பெருந்தோட்ட புதிய குடியேற்றக் கிராமங்கள்” என்று கூறி, இன்று மலையகம் முழுக்க எழுந்துள்ள காணி உரிமை கோரிக்கையைக் குழி தோண்டி புதைக்க வேண்டாம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி, பிரதி தலைவர் பழனி திகாம்பரம் எம்.பி., எம்.வேலுகுமார் எம்.பி., எம்.உதயகுமார் எம்.பி. ஆகியோர் அடங்கிய தூதுக்குழு, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் நேரில் தெரிவித்து, இது தொடர்பான கட்சியின் நிலைப்பாட்டைத் தெரிவிக்கும் எழுத்து மூல ஆவணத்தையும் கையளித்துள்ளது.





## “ஆசிரியர்கள் வேண்டும்”; மாணவர்கள் போராட்டம்

■ நீலமேகம் பிரசாந்த்

பதுளை மாவட்டம், வெலிமடை கல்வி வலயத்திற்கு உட்பட்ட வோர்விக் அம்பேவெல சரஸ்வதி தமிழ் வித்தியாலத்திற்கு ஆங்கில பாடத்திற்கான ஆசிரியர்களை நியமிக்குமாறு கோரி பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் இணைந்து செவ்வாய்க்கிழமை (17) காலை 8 மணியளவில் கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

150க்கு மேல் கல்விப் பயிலும் குறித்த பாடசாலையில் கடந்த மூன்று மாத காலமாக ஆங்கில பாட ஆசிரியர் இல்லாதமை மாணவர்களுக்கு பெரும் பிரச்சினையாகக் காணப்படுவதாகவும் பரீட்சைகள் வருவதால் ஆங்கில பாடம் கற்பதில் பெரும் அசௌகரியம் ஏற்படுவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டோர் குறிப்பிட்டுள்ளனர்.

> “ பரீட்சைகள் வருவதால் ஆங்கில பாடம் கற்பதில் பெரும் அசௌகரியம் ஏற்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்



## நல்லூரான் திருவிழால் ‘டிரோன்’ பறக்கத் தடை

■ எம்.றொசாந்த்

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா 2024ற்கான புற ஏற்பாடுகள் முதலாவது கலந்துரையாடல், மாநகர ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன் அவர்களின் தலைமையில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை (15) இடம்பெற்றுள்ளது.

இக்கூட்டத்தில் பெருந்திருவிழா புற ஏற்பாடுகள் தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1. ஆலயச் சூழலில் வீதிப்போக்குவரத்து நடவடிக்கைகள் 07.08.2024ஆம் திகதி நள்ளிரவு தொடக்கம் 04.09.2024 நள்ளிரவு வரை ஆலய வெளி வீதியின் ஊடான போக்குவரத்துக்கள் முற்றாகத் தடை செய்யப்பட்டிருக்கும்.

2. பிரதான வீதித்தடைகள் பருத்தித்துறை வீதியில் மாநகர சபைக்கு முன்புறம் அரசடிச்சந்தி, கோயில் வீதியில் சங்கிலியன் வீதி சந்தி, பிராமணக்கட்டு குள வீதிச் சந்தி போன்ற இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும். சுகாதார பாதுகாப்பு தேவைகளிற்கேற்ப மேற்படி வீதித்தடைகளின் அமைவுகளில் மாற்றங்கள் ஏற்படலாம்.

3. கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டது போல இம்முறையும் மாற்று வீதி ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் வழமைபோல் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு முன்னால் உள்ள குறுக்கு வீதியால் பயணித்து நாவலர் வீதி ஊடாக ஆனைப்பந்திசந்தியை அடைந்து யாழ் நகரை அடைய முடியும். யாழ் நகரில் இருந்து திரும்பும் வாகனங்கள் அதே பாதை ஊடாக பருத்தித்துறை வீதியை அடைய முடியும். விசேட பெருந்திருவிழாக்களின் போது முத்திரைச்சந்தியில் திரும்பி கச்சேரி நல்லூர் வீதி ஊடாக நாவலர் வீதியை அடைந்து பயணிக்க முடியும். கோயில் வீதி வழியாக வரும் வாகனங்கள் சங்கிலியன் வீதியூடாக பருத்தித்துறை வீதியை அடைந்தும், செட்டித்தெரு ஒழுங்கையூடாக பருத்தித்துறை வீதியை அடைந்து பயணிக்க முடியும்.

4. தூக்குக் காவடிகள் வழமை போல் பருத்தித்துறை வீதி வழியாக உள்நுழைந்து ஸ்ரீமுருகன் தண்ணீர் பந்தலில் காவடிகள் இறக்கி டிராக்டர்கள் செட்டித்தெரு வீதியூடாக வெளியேற வேண்டும்.

5. ஆலய வீதிச்சூழலில் வீதித்தடைகளுக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கும் வழமை போல வாகன அனுமதி அட்டை மாநகர சபையால் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நிரந்தர வியாபாரிகள் பொருட்களை ஏற்றி இறக்க விசேட நேரக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது.

6. உற்சவ காலங்களில் சிறுவர்களைப் பயன்படுத்தி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது.

7. ஆலய வெளி வீதி சூழலில் வியாபார, விளம்பர மற்றும் ஒளிபரப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாது.

8. உற்சவ காலங்களில் ஆலயச் சூழலில் பொலித்தீன் பாவனை முற்றாக தவிர்க்கப்பட வேண்டும்.

9. உற்சவ காலங்களில் ஆலய வெளி வீதி சூழலில் காலணிகளுடன் நடமாடுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

10. உற்சவ காலங்களில் ஆலயச் சூழலில் பக்தி கீதங்கள் மட்டுமே ஒலிபரப்பு செய்யமுடியும்.

11. உற்சவ காலங்களில் விநியோகிக்கப்படும் விளம்பரங்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்களில் கடவுள் திருவுருவப்படங்கள் பிரசுரிப்பது தவிர்க்கப்பட்டுள்ளது.

12. ஆலயச் சூழலில் ட்ரோன் (Drone) கமராக்களைப் பயன்படுத்தி காணொளி பதிவு செய்வது தவிர்க்கப்பட்டுள்ளது.

அனைவரும் ஒத்துழைப்பினை வழங்குமாறு யாழ். மாநகர ஆணையாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## திறந்த பிடியாணை எம்.பி: பொது வைபவத்தில் பங்கேற்றார்

கற்பிட்டி சுற்றுலா நீதவான் நீதிமன்றில் திறந்த பிடியாணை பிறப்பித்த புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், கற்பிட்டி அல் அக்ஷா தேசிய பாடசாலையில் செவ்வாய்க்கிழமை (16) இடம்பெற்ற வைபவமொன்றில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

விழா மைதானத்திற்குப் பாராளுமன்ற உறுப்பினரை பொலிஸ் உத்தியோகத்தர் அழைத்துச் செல்வதைக் காணக்கூடியதாக இருந்தது.

கற்பிட்டியில் உள்ள அரச சார்பற்ற நிறுவனமொன்றினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, புத்தளம் நீதவான் நீதிமன்றத்தில் மூன்று தடவைகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, பாராளுமன்ற உறுப்பினர் மூன்று தடவைகளும் நீதிமன்றத்தை தவிர்த்துள்ளார்.

சட்டத்தரணி அல்லது பாராளுமன்ற உறுப்பினரை பிரதிநிதித்துவப்படுத்தாமல் நீதிமன்றத்தைத் தவிர்த்ததன் அடிப்படையில், உடனடியாக பாராளுமன்ற உறுப்பினரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிறுத்துமாறு மேலதிக மாவட்ட நீதிபதியும் நீதவானுமான திருமதி அயோனா விமலரத்ன கற்பிட்டி பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இந்நிகழ்வில், வடமேற்கு மாகாண ஆளுநர் அஹமட் நசீரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.



## கிணற்றில் விழுந்து 5 வயது சிறுமி பலி



ருவன்வெல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிரிபோருவ தோட்டத்தில் செவ்வாய்க்கிழமை (16) சிறுமி ஒருவர் கிணற்றுக்குள் விழுந்து உயிரிழந்துள்ளதாக ருவன்வெல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த தோட்டத்தைச் சேர்ந்த 5 வயதுடைய தேவ்மினி அமாஷா என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தாய் மற்றும் சிறுமி குறித்த கிணற்றுக்குள் தவறி விழுந்துள்ளதாகவும், இதில் 28 வயதுடைய பி.நிரோஷா என்ற தாய் காப்பாற்றப்பட்டு கரவனெல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

மேலும், சிறுமியின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக கரவனெல்ல வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை ருவன்வெல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## “17,140,000 பேர் வாக்களிக்க தகுதி”



ஜனாதிபதித் தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பில், ராஜகிரியவில் உள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் கேட்போர் கூடத்தில், செவ்வாய்க்கிழமை (16) ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது. அதில், தெளிவுபடுத்தப்பட்ட விடயங்களை மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள்) எஸ். அச்சுதன் உரை பெயர்த்தார்.

எனினும், அந்த ஊடகவியலாளர் சந்திப்பில், அவர் கலந்துகொண்டு கருத்துரைத்ததாக எமது தமிழ்மிரர் மின்னிதழில் செய்தி வெளியானது. அது தவறாகும். அந்த செய்தியின் தலைப்பில் “ஒருகோடி பேர் வாக்களிக்க தகுதி” என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. அவற்றால் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருந்துகின்றோம். சுட்டிக்காட்டியமைக்கு நன்றியைக் தெரிவித்துக் கொள்கின்றோம்

ஜனாதிபதித் தேர்தலில் இம்முறை வாக்களிப்பதற்காக, ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரம் வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆர்+ர்)

TALES OF CONSERVATION

Action and Aspiration combined with Art

இளைஞர்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தவும், கலையின் மூலம் அவர்களின் பாதுகாப்பு உரிமைகள் மற்றும் பொறுப்புகளைப் புரிந்துகொள்ளவும் அதனை ஊக்குவிப்பதன் மூலம் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் மற்றும் நிர்வாகத்தைப் பற்றிய ஆக்கப்பூர்வமான மற்றும் புதுமையான உரையாடல்களை ஊக்குவிப்போம். இந்த அணுகுமுறை கலைஞர்கள் மற்ற பாதுகாப்பு அமைப்புகளுடன் ஈடுபடவும் அவர்களின் கலைப்படைப்புகளை உருவாக்கவும் ஊக்கமளிக்கும். இது நமது நாட்டில் சுற்றுச்சூழல் இயக்கத்தில் தீவிரமாக பங்கேற்கவும் பங்களிக்கவும் இளைஞர்களுக்கு சக்தியளிக்கிறது.

**அம்சங்கள்:**

• கழிவு முகாமைத்துவம்
• இயற்கை பாதுகாப்பு
• காலநிலை மாற்றம்
• பாதுகாப்பு கல்வி
• சுற்றுச்சூழல் சட்டம்

**போட்டி வகைகள்:**

• புகைப்படம் எடுத்தல்
• டிஜிட்டல் கலை
• ஓவியங்கள் மற்றும் வரைபடங்கள்
• சிற்பங்கள்/ நிறுவல்கள் (ஒரு முன்மொழிவை வழங்கவேண்டும்)
• ஃபேஷன் வடிவமைப்புகள் (ஒரு முன்மொழிவை வழங்கவேண்டும்)

**வயது பிரிவு:**
18-40 வயது

**முன்மொழிவு சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு:**
21 ஜூலை 2024

பரிசுத் தொகை | ஒவ்வொரு பிரிவிலும்

**முதல் இடம் - ரூ. 75,000**
**2வது இடம் - ரூ. 50,000**
**3வது இடம் - ரூ. 30,000**

கீழே உள்ள QR குறியீட்டின் மூலம் உங்கள் கலைப்படைப்பைச் சமர்ப்பிக்கவும்.

USAID FROM THE AMERICAN PEOPLE

Supported by :
USAID

Implemented by :
WNPS Youth Wing

# பாதுகாப்பை அதிகரிக்கச் செய்த ட்ரம்ப் மீதான துப்பாக்கிச் சூடு

நவம்பர் 5ஆம் திகதி நடைபெற உள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தொடர்பிலான பிரசாரங்கள் சூடுபிடித்துள்ளன, அந்தத் தேர்தலை உலக நாடுகள் பலவும் கண்காணித்துக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில்தான், குடியரசு கட்சி வேட்பாளராகப் போட்டியிடும் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

அதில், அவர் மயிரிழையில் உயிர் தப்பி, தேர்தல் களத்தில் மீண்டும் குதித்துள்ளார். இதனையடுத்தே, மிக முக்கியஸ்தர்களின் பாதுகாப்பு தொடர்பில், உலகநாடுகளில் பல தங்களுடைய கவனத்தைச் செலுத்தியுள்ளன. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் பாதுகாப்பையும் பலப்படுத்தவேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தி, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில், பாராளுமன்ற, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதித் தேர்தல் நடக்குமா? நடக்காதா? என்ற கேள்விகளுக்கு இன்னுமே விடைத்தெரியவில்லை. எனினும், ஊடகவியலாளர் சந்திப்பொன்றைச் செவ்வாய்க்கிழமை (16) நடத்திய தேர்தல்கள் ஆணைக்குழு, ஜூலை மாத நிறைவில் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை அறிவிப்பதாக அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படும் வரையிலும், சந்தேகம் களையப்படாது. எனினும், பொது நிகழ்வுகளில், ஊடவியலாளர்கள் சந்திப்பில் இன்றேல் ஏனைய நிகழ்வுகளில் பங்கேற்கும் அரசியல் பிரதிநிதிகள், ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் விடுவதற்கான சூழ்ச்சிகளை அரசாங்கம் செய்து கொண்டிருக்கின்றது என்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களினதும் முன்னாள் ஜனாதிபதிகளினதும் பிரத்தியேக பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காகக் குழுவொன்றை நியமிக்கப்படவுள்ளது.

அத்தகைய சகல பாதுகாப்பு நடவடிக்கைகளையும் ஒருங்கிணைப்பதற்கும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமிப்பதற்கும் பரிந்துரைத்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு, புதன்கிழமை (17) அறிவித்துள்ளது.

அமெரிக்கத் தேர்தலை உலகநாடுகள் பல அவதானித்துக்கொண்டிருக்கும் நிலையில், இலங்கையில், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில், பொதுமக்களிடையே குழப்பகரமான நிலைமையே காணப்படுகின்றது. தமிழ்த் திரைப்படமொன்றின் நகைச்சுவை காட்சியில், "வரும் ஆனா வராது" என்பது போலவே, ஜனாதிபதித் தேர்தல் இருக்கிறது.

எனினும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரங்களை ஆரம்பித்துள்ளன. பிரத்தியேக பாதுகாப்பு ஏற்பாடுகளையும் முன்னெடுத்துள்ளன.

"தங்கள் பேராசை பிடித்த வாழ்க்கை முறையைத் தக்க வைத்துக் கொள்ள நாட்டையும், ஜனநாயகத்தையும், அரசியலமைப்பையும் விற்கத் தயாரான ஆட்சியாளர்களும் இன்று இருக்கிறார்கள்" என எதிர்க்கட்சித் தலைவர் குற்றஞ்சாட்டியுள்ளார். ஆக சூழ்ச்சிகள் நடைபெறலாம். அதில் விபரீதங்கள் ஏதாவது ஏற்பட்டுவிட்டால் அதன் பொல்லாப்பு அரசாங்கத்தின் தலையிலேயே விழும். ஆகையால், பாதுகாப்பு ஏற்பாடுகளை திறம்பட முன்னெடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## மனித உரிமைகள் பேணப்பட்டால்

# நாடு ஒரே நாடாக இருக்கும்

– முருகானந்தம் தவம்

இலங்கையில் இன, மத ரீதியான தாக்குதல்கள் இடம்பெறுவதனாலும் இலங்கையர்கள் இனம், மதம், மொழி எனப் பிரிந்து கிடப்பதனாலும் இலங்கையில் இன, மத ரீதியிலான அரசியல் கட்சிகள், அமைச்சுக்கள், பாடசாலைகள், அனைத்தும் தடை செய்யப்பட வேண்டுமென்ற குரல்கள் சிங்கள அரசியல்வாதிகளிடமிருந்து 'ஒரே நாடு' என்ற கோஷத்துடன் கோட்டாபய ராஜபக்ஷ அரசில் பலமாக ஒலித்து ஓய்ந்த நிலையில், தற்போது அந்தக் கோஷத்தை நீதி,சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மீண்டும் கையிலெடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மதத் தீவிரவாதத்தினை தடுப்பதன் அவசியம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. ஹேஷா விதானகே கொண்டுவந்த தனிநபர் பிரேரணைக்குப் பதிலளித்து உரையாற்றிய நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, இலங்கையில் இன,மத அடிப்படையில் அரசியல் கட்சிகள் இருக்கும்வரை நாட்டில் ஜனநாயகம் தலைதூக்க முடியாது. எனவே, இன,மத ரீதியில் கட்சிகள் உருவாக்கப்படுவதனை தடை செய்ய வேண்டும். அத்துடன், புனர்வாழ்வு சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டு இனவாத,மதவாத அடிப்படைவாத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை புனர்வாழ்வளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் இன, மத பெயர்களுடன் இயங்கும் அரசியல் கட்சிகள் தடைசெய்யப்பட வேண்டும். பௌத்தம், இந்து, முஸ்லிம், கிறிஸ்தவம் என ஒவ்வொரு மதத்துக்கும் ஒவ்வொரு அமைச்சு தேவையில்லை. எல்லா மதங்களுக்கும் ஒரு அமைச்சர் இருந்தால் போதும். சிங்களப் பாடசாலை, தமிழ் பாடசாலை, இந்துப் பாடசாலை, முஸ்லிம் பாடசாலை, கிறிஸ்தவப் பாடசாலை என ஒவ்வொரு இனத்துக்கும் மதத்திற்கும் பாடசாலைகள் தனித்தனியே தேவையில்லை. அனைத்தையும் ஒன்றாக்க வேண்டுமென்பதே 'ஒரே நாடு' என்ற போர்வையில் சிங்கள பேரினவாத அரசியல்வாதிகளினால் வலியுறுத்தப்பட்டு வரும் விடயம்.

இலங்கையின் பெரும்பான்மை இனமாகச் சிங்களவர் உள்ளனர். இவர்கள் நாட்டின் மொத்த சனத்தொகையில் 74 வீதமாக உள்ளனர். நாட்டின் அடுத்த முக்கிய இனமாகத் தமிழர் சனத்தொகையில் 15.4 வீதமாக உள்ளனர். இவர்கள் இலங்கைத் தமிழர் மற்றும் இந்தியத் தமிழரென இரு பெரும் பிரிவினராகவுள்ளனர். இலங்கையின் அடுத்த முக்கிய இனமாக முஸ்லிம்கள் 10 வீதமாக உள்ளார்கள். அத்துடன், இதர இனங்களாகப் பறங்கியர் 1 வீதமாகவும் ஆதிவாசிகள் 0.1 வீதமாவும் உள்ளனர். இலங்கையின் பிரதான மதங்கள் பௌத்தம் 70,19 வீதமாகவும் இந்து சமயம் 12,61 வீதமாவும் இஸ்லாம் 9,71 வீதமாகவும் கிறிஸ்தவம் 7,45 வீதமாவும் உள்ளன. இவ்வாறான நிலையில், இலங்கையில் இன, மத அடையாளங்களுடன் அரசியல் கட்சிகள் அவசியமா? என்பது தொடர்பில் பார்ப்போம்

பிரித்தானிய ஆட்சியுடன் ஆரம்பிக்கும் இலங்கையின் அரசியற் கட்சிச் செயற்பாடுகள் சுதந்திரத்தின் பின்னர் இன, மத ரீதியான காரணங்களுடன் முனைப்புப் பெற்றன. இலங்கையின் பிரதான கட்சிகளும் சிங்கள தேசியவாத கட்சிகளும் பௌத்த மதத்துக்கு முதன்மை வழங்க வேண்டும் என்ற சிந்தனையோடு செயற்படுகின்றன.

அதேபோல், சிறுபான்மையினக் கட்சிகள் தமது இன, மத சுதந்திரத்தைப் பாதுகாக்கும் நோக்கில் இன, மதத்தினை தமது கட்சியின் கொள்கைகளில் உள்வாங்குகின்றனர். இவ்வாறு இலங்கையின் அரசியற் கட்சிகளின் தோற்றதிலும் வளர்ச்சியிலும் இனம், மதம் செல்வாக்குச் செலுத்தி வருகின்றது.

இலங்கையின் தேர்தல் செயலகத்தில் 70 அரசியல் கட்சிகள் முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 15க்கு மேற்பட்ட கட்சிகள் தமிழ், முஸ்லிம், மலையக இன, மத அடையாளங்களுடனும் மூன்று வரையான கட்சிகள் சிங்கள இன அடையாளங்களுடனும் உள்ளன.

இவற்றில் இன, மத அடையாளங்களைக் கொண்ட இலங்கை தமிழரசுக் கட்சி, ஈழ மக்கள் ஜனநாயக கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவை பாராளுமன்றத்தில் தனிக் கட்சிகளாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிலையில், தமிழ் முற்போக்கு கூட்டணி, மலையக மக்கள் முன்னணி ஆகியன அரசின் பங்காளிக் கட்சிகளாகவும் உள்ளன. சிங்களக் கட்சிகளைப் பொறுத்தவரை இன, மத அடையாளமற்ற ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி ஆகியவை பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

இவ்வாறான நிலையில், இலங்கையில் இன, மத அடையாளங்களுடன் இயங்கும் அரசியல் கட்சிகள் தடை செய்யப்பட்டால் தமிழ், முஸ்லிம், மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறுபான்மையினக் கட்சிகள்தான் பாதிக்கப்படும்.

அதேவேளை, இன, மத அடையாளங்களுடன் இயங்கும் இந்த சிறுபான்மையினக் கட்சிகள் இந்த இன, மத அடையாளங்களுடன் இல்லாத அரசியல் கட்சிகள் செய்யாத எதனைச் செய்து விட்டார்கள் என்பதற்காகத் தடை செய்யப்பட வேண்டும்? இன அடையாளம் இருந்தால் இனவாதம் பேசுவார்கள், மத அடையாளம் இருந்தால் மதவாதம் பேசுவார்கள் என்றால் இவ்வாறு இன அடையாளம் இல்லாத கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இனக் கலவரம் செய்யவில்லையா. இனப் படுகொலைகள் செய்யவில்லையா? ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு என்ற பெயரைக் கொண்ட கட்சி முள்ளிவாய்க்காலில் தமிழினப் படுகொலையில் ஈடுபடவில்லையா? மக்கள் விடுதலை முன்னணி என்ற பெயரைக்கொண்ட கட்சி அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடவில்லையா? தம்மினத்தை சேர்ந்த ஆயிரக்கணக்கானவர்களைப் படுகொலை செய்யவில்லையா? அல்லது இந்தக் கட்சிகள் இனவாதம், மதவாதம் தான் பேசவில்லையா? தேசிய சுதந்திர முன்னணி என்ற கட்சியின் கொள்கையே இன வாதம் தானே? எனவே, இலங்கையில் இன, மத அடையாளங்களுடன் இயங்கும் அரசியல் கட்சிகள் தடை செய்யப்படவேண்டுமென்பதும் ஒரு இன வாதம்தான்.

இனம் அல்லது மதம் என்பவற்றின் அடையாளத்தை வெளிப்படுத்தும் வகையில் காணப்படும் அரசியல் கட்சிகள், தமது பெயர்களை மாற்றாவிடின், அவற்றின் பதிவுகளை ரத்து செய்யத் தேர்தல்கள் ஆணையாளருக்கு உத்தரவிடுமாறு கோரி 2015ஆம் ஆண்டு ஜனாதிபதி சட்டத்தரணி பிரசாந்த லால் டி அல்விஸ் அடிப்படை உரிமை மனுவொன்றை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

இனம், மதம் என்பவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்திப் பெயரிடப்பட்டுள்ள 20 கட்சிகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் இன மற்றும் மத ரீதியாக கட்சிகள் அடையாளப்படுத்தப்படுவதால், பொது மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாகவும் அவர் தனது மனுவில் சுட்டிக்காட்டியிருந்தார். எனினும், இன மற்றும் மத ரீதியான அடையாளங்களைக் கொண்ட அரசியல் கட்சிகளைத் தடை செய்யுமாறு கோரி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவை 01-08-2016ஆம் ஆண்டு உயர் நீதிமன்றம் விசாரணைக்கெடுத்து இரத்து செய்தது.

ஜனாதிபதி சட்டத்தரணி பிரசாந்த லால் டி அல்விஸ் தாக்கல் செய்த இந்த மனுவை, உச்ச நீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்கள் கொண்ட குழு பரிசீலித்தது. இந்த மனுவில் தேர்தல் ஆணையாளர், சட்ட மா அதிபர் மற்றும் 20 அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

குறிப்பாக இலங்கை தமிழரசு கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், பொதுஜன முன்னணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், அகில இலங்கை தமிழ் மகாசபை, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை கட்சி, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, ஜனநாயக மக்கள் முன்னணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளைத் தடை செய்யுமாறு கோரப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே உயர்நீதிமன்றம் இந்த மனுவை இரத்துச் செய்தது. எனவே, இன, மத அடையாளங்களுடன் இயங்கும் அரசியல் கட்சிகள் தடை செய்வதென்பதனை உயர் நீதிமன்றம் கூட ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆட்சிபுரிபவர்கள் இன வாதம், மதவாதம் இல்லாத நேர்மையானவர்களாக இருந்தால், நாடு ஜனநாயக முறைப்படி ஆட்சி செய்யப்பட்டால், ஒவ்வொரு இனங்களினதும் மதங்களினதும் உரிமைகள் மதிக்கப்பட்டால், மனித உரிமைகள் பேணப்பட்டால் நாடு ஒரே நாடாகவும் மக்கள் ஓரின மக்களாகவும் இருப்பர்.

இலங்கையில் இன, மத ரீதியிலான அரசியல் கட்சிகள் அமைச்சுக்கள், பாடசாலைகள், அனைத்தும் தடை செய்யப்பட வேண்டுமென்ற குரல்கள் ஒலிப்பதற்கான எந்தத் தேவைகளும் எழாது. எனவே, ஆட்சியாளர்கள், அரசியல்வாதிகள், பேரினவாதிகளின் மனங்களில், குணங்களில் மாற்றம் ஏற்படவேண்டுமே தவிர அரசியல் கட்சிகள் அமைச்சுக்கள், பாடசாலைகளின் இன, மத அடையாளங்களில் மாற்றங்கள் ஏற்படவோ ஏற்படுத்தப்படவோ வேண்டிய எந்தத் தேவைகளும் கிடையாது.

எனவே, இனவாத கரு மேகம் சூழ்ந்துள்ள இலங்கையில் தமிழ் ,முஸ்லிம்களிடமுள்ள எச்ச,சொச்ச உரிமைகள்,சலுகைகளையும் பறித்தெடுத்துவிட வேண்டுமென்பதில் பேரினவாதம் சந்தர்ப்பவாத அரசியலைக் கையில் எடுத்துள்ளது. அந்த வகையில்தான் தற்போது "இலங்கையில் இன, மத அடிப்படையில் அரசியல் கட்சிகள் இருக்கும்வரை நாட்டில் ஜனநாயகம் தலைதூக்க முடியாது. எனவே, இன, மத ரீதியில் கட்சிகள் உருவாக்கப்படுவதனை தடை செய்ய வேண்டும்" என்ற கோஷத்திற்கு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மீண்டும் உருவேற்றியுள்ளார்.



# வாழ்வியல் தரிசனம்

இருவர் தங்களுக்குள் பேசியபடி சென்றார்கள். அவர்களில் ஒருவர், ஊரில் யாரோ இளைஞர்கள் சண்டை செய்ததாகச் சொன்னார். எங்கு நடந்தது என்பது பற்றிப் பேசாமல் சென்று கொண்டிருந்தனர்.

இதைக் கேட்ட வீதியின் அருகே நின்றிருந்தவர், "என்ன எங்கள் ஊரில் சண்டையா" எனக் கேட்டு விட்டு, உடனே ஊருக்குள் சென்று, தனது கற்பனைகளையும் சேர்த்து, வாய், மூக்கு, வால் என்பவற்றைச் சேர்த்து, அங்குள்ள ஒருவருக்குச் சொல்ல, அவரும் அதற்கு மேலும் பல கதைகளைச் சோடித்துச் சொல்ல, ஊர்ச் சனங்களும் ஆவேசத்துடன் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, அவர்களைத் தேடிச் சென்றார்கள்.

ஊரே பரபரப்படைந்தது. முடிவில் அங்கு ஒன்றுமே நடக்கவில்லை என்பதை அறிந்து, "யாரடா இதைச் சொன்னது" என கேட்க, கதையைக் கட்டியவர்கள் ஒளித்துத் தப்பித்து விட்டார்கள். முடிவில் அங்கு ஒன்றுமே நடக்கவில்லை என்பதை அறிந்து, தத்தமது காரியங்களைச் செய்தால், வீணான சிந்தனைகள் புறப்படாது. கலவரங்கள் எல்லாமே வதந்திகளால்த் தான் உருவாகின்றன. யுத்தங்கள் கூட!

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### 65 ஏக்கர் காணி இனங்காட்டப்படவில்லை

கிளிநொச்சி-முரசுமோட்டை கமக்கார அமைப்பிற்கு உட்பட்ட பகுதியில் சிறுபோகத்திற்கு காணி இனங்காட்டப்படாமை தொடர்பாக கிளிநொச்சி மாவட்டச் செயலாளருக்கு கமக்கார அமைப்பு கடிதம் அனுப்பி உள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கிளிநொச்சி முரசுமோட்டை பகுதியில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கையின் போது 65 ஏக்கர் காணி இனங்காட்டப்படாததன் காரணமாக விவசாயிகள் பயிர் செய்கையில் ஈடுபட முடியாத நிலைமையுள்ளது.

கமக்கார அமைப்பிற்கு பயிர்ச் செய்கைக்கான நீர் வரி மொத்த காணி 865 ஏக்கர் என 2024இல் சிறுபோக பயிர்ச் செய்கை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட நிலையில் இச்சிறு போகத்திற்கான அமைப்பிற்குரிய விகிதாசாரத்தின் படி, 614 ஏக்கர் விதைப்பு காணியாகத் தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பாக முரசுமோட்டை கமக்கார அமைப்பினால் யாழ்ப்பாணத்தில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. 251 ஏக்கர் மேலதிக விதைப்பாக இடம் பெற்றுள்ளதாகவும் உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் விவசாயிகளினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

– நடராசா கிருஸ்ணகுமார்

## ஆடி அடங்கிய ஆத்மாக்களுக்கான பிதிர்க்கடன் செலுத்தும்

# ஆடி அமாவாசைத் தீர்த்தம்

வித்தகர் விபுலமாமணி
வி.ரி.சகாதேவராஜா

திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலய ஆடி அமாவாசை உற்சவ கொடியேற்றம் வியாழக்கிழமை(18) நடைபெறும்.

திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமிஆலய ஆடி அமாவாசை உற்சவமானது எதிர்வரும் 2024.07.18ஆம் திகதி வியாழக்கிழமை ஆலய பரிபாலன சபை தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து 2024.08.04ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது.

**அவ் ஆலயம் தொடர்பான வரலாற்று ஆய்வு ரீதியான கட்டுரை இது...**

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவனுமாகி நிலவு நதி அரவு புனை நிருமலனுமாகி அலகிலா சோதியாய் அம்பலத்தாடும் அரனாரின் நெற்றி விழிப் பொறியின் உலகம் உய்ய வந்து உதித்தவர் முருகப்பெருமான் வெண்ணாவல் மரத்திலே வேல் வடிவாக முருகப்பெருமான்.

வீற்றிருந்த திருத்தலம் திருக்கோவில் ஆகும். அந்தரத்துத் தேவர்களும் அனுபவித்த

விண்ணவரும் மண்ணவரும் வியந்து போற்ற வடக்கு முகமாகவிருந்த வேற்பெருமான் தானாகவே கிழக்குமுகமாகத் திரும்பிய புண்ணியபதி திருக்கோவில்.

ஆடி அமாவாசை அன்று ஆறுமுகமோடு ஆழ்கடலில் தீர்த்தமாடி பிதிர்க்கடன் நிறைவேற்றும் கோவில். அன்று நாகர்முனை வெண்ணாவலம்பதி கந்தபாணத்துறை என்ற பெயர்களால் அழைக்கப்பட்ட திருக்கோவில் வரலாற்றுரீதியாக முக்கியத்துவம் பெறுகிறது.

**வரலாறு...**

மட்டக்களப்பை பிரசன்னசித்து என்பான் ஆண்ட காலத்தில் கலிங்க குமரனான புவனேக கயபாகு தன் மனைவியுடன் மக்கட்பேறில்லாக் கவலையினால் வாடித் தலயாத்திரை மேற்கொண்டு இராமேஸ்வரம் திருக்கேதீஸ்வரம் திருக்கோணமலை எனும் புண்ணிய பழம்பெரும் பதிகளைத் தரிசித்துவிட்டு நாகர்முனையிலிருக்கும் (தற்போது திருக்கோவில் ) வேற்பெருமானின் சிறப்பினை கேள்வியுற்று மட்டக்களப்புக்கு வந்தான். புவனேக கயபாகுவின் மனைவியாகிய தம்பதிநல்லாள் ஒரு சோழ அரசன் மகளாவாள்.

நாகர்முனையிலுள்ள சுப்பிரமணியர் ஆலயத்தை நல்லமுறையில் அமைத்தற்கு நல்லதொரு சந்தர்ப்பத்தை அவர்கள் வரவால் பெற்ற மட்டக்களப்பு மன்னனும் புவனேக கயபாகுவிற்கு தன் கருத்தைத் தெரிவித்து அவன் துணையை வேண்டினான்.

அதற்கிணங்க தம்பதி நல்லாளின் தந்தையான திருச்சோழனுக்கு புவனேக கயபாகு நல்ல சிற்பியர் முதலானோரை அனுப்பிவைக்குமாறு விட்ட ஓலையின்படி கைதேர்ந்த சிற்பநூல் வல்லார் பலர் நாகர்முனைத் துறைமுகத்தில் வந்திறங்கினர்.

சிற்பக்கலையின் சிறப்பை எடுத்து விளக்குவதான திருக்கோவிலின் திருப்பணியும் நன்முறையில் விரைவிலே நிறைவேறலாயிற்று.

மட்டக்களப்பிற் சிறப்புற எழுந்த முதலாவது பெருங்கோவிலாதலால் "திருக்கோவில்" என மன்னன் அதற்குப் பெயர் சூட்டி மகிழ்ந்தான். (கி.பி.28) மேலும் ஆலயத்தின் திருப்பணி வளர்ச்சிக்காய் மன்னன் பல ஏக்கர் வயல் நிலங்களைக் கொடுத்தான். அதற்கு நீர்பாய்ச்சுவதற்காக ஒரு பெரிய குளத்தையும் சங்குமண்கண்டி (சங்கமான்கண்டி) மலைக்குக் கீழ்ப்பால் அமைத்துக் கொடுத்தனர். மேலும் திருக்கோவிலுக்குப் பக்கத்தில் ஒரு வாவியினைத் தன் தாயாகிய தம்பதிநல்லாள் நினைவாய் அமைத்து அதற்குத் தம்பதிவில் என்று பெயரிட்டனர்.

'வில்' எனும் சொல் மட்டக்களப்பில் குளத்தைக் குறிக்க வழங்குவதாகும்.

இக்குளத்தைச் சார்ந்த பகுதியில் அமைந்த ஊரும் 'தம்பதிவில்' என இருந்து இன்று 'தம்பிலுவில்' என்று மருவி வழங்கப்பெறுகிறது.


திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமியின் அருளால் புவனேக கயபாகுவிற்குப் பிறந்த மகனான மேக வருணன் பின்னர் கி.பி.48இல் உன்னரசக்கிரியின் ஆட்சிபீடமேறினான்.

'உன்னரசுக்கிரி' என்பது திருக்கோவிலின் தென்பாலுள்ள உகந்தைமலைக்கும் பாலர்நகைநாடு (பாணமை) என்ற பண்டைய துறைமுகத்திற்குமிடையே இருந்திருக்கின்றது. அதனாலும் வேறு சான்றுகளாலும் தற்காலம் சன்னியாசிமலை என்ற பெயருடன் வழங்கப்படுகின்றது.

**ஆலயங்களை அழித்த போத்துக்கீசர்...**

பிற்காலத்தில் போத்துக்கீசர் இலங்கையிலுள்ள பல நூற்றுக்கணக்கான ஆலயங்களை அழித்ததாக குவரோஸ் அடிகள் தனது நூலில் குறிப்பிடுகின்றார். போத்துக்கீச தேசாதிபதி அசவீடோ தகர்த்தெறிந்த ஆலயங்களுள் திருக்கோவிலும் ஒன்றாகும்.







திருக்கோவிலில் 3 கோபுரங்கள் இருந்தன. என்றும் அவை மூன்றும் அசவீடோவினால் அழிக்கப்பட்டதாகவும் கூறுகிறார் குவரோஸ் அடிகளார். அதன் தொடர்ச்சியாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரார் கோயிலைத் தகர்த்தெறியும் நோக்கோடு சென்ற போர்த்துக்கீசர் அங்கிருந்த கருங்கல்லாலான நந்தி கோவில் பூசகரின் ஏவற்படி புல் தின்றதைக் கண்டு வியந்தவராய்த் தாங்கள் கருதியபடி அழிவு செய்யத் துணிவு பெறாது மீண்டனர் என்று ஒரு கதை கூறுகிறது.

அவ்வாறே மண்டூர்க் கந்தசுவாமி கோவிலை நோக்கிச் சென்ற போர்த்துக்கேயர் கோவில் வீதியை அடைந்ததும் கருங்குளவிகளாற் கொட்டப்பெற்றுப் பெரும் பதைபதைத்து உயிருக்கஞ்சி ஓடினரென்றும் அவர்கள் ஓடும்போது அவசரத்தில் தமது துப்பாக்கிகள் வாள் ஈட்டிகள் என்பவற்றை விட்டுவிட்டுச் சென்றதாகவும் கூறப்படுகிறது. அவைகள் இன்றும் ஆலயத்தில் உள்ளன என்பது வரலாற்று உண்மையாகும்.

திருப்படைக்கோவில்கள் சில வர்த்தமானி பிரகடனம் செய்யப்பட்டவையாகும்.

வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயம், மண்டூர் முருகன் ஆலயம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் , பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயம், திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயம், மாமாங்கம் பிள்ளையார் ஆலயம் போன்றனவாகும்.

திருப்படைக் கோவிலான திருக்கோவில் தேசத்துக்கோவிலாகும். அங்கு சில ஆசாரங்கள் நியமங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

ஆடி அமாவாசைத் திருவிழா, சிவராத்திரி, பிள்ளையார் காப்பு, கந்தபுராணம் படித்தல், சூரன் போர், திருவெம்பாவை போன்ற நிகழ்வுகள் வருடாந்தம் நடைபெறுபவை.

ஆடிஅமா வாசை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 18 நாட்கள் திருவிழாக்கள் நடைபெற்று இறுதியில் சமுத்திர தீர்த்தோற்சவம் நடைபெறுவது வழமையாகும்.

இம்முறை இத் திருவிழா 18ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 04ஆம் திகதி ஆடி அமாவாசை தினத்தன்று தீர்த்தோற்சவம் நடைபெறும்.

**வரலாறு...**

மட்டக்களப்பு-மான்மியக் குறிப்பின்படி, சுப்பிரமணியருடைய ஆணைப்படி, சூரனைக் கொன்று வெற்றியுடன் மீண்ட வேலானது உக்கிரத்தோடு வரும் வழியில் எதிர்ப்பட்ட வாகூர மலையை இரு கூறுகளாய் பிளந் தெறிந்து கடலில் மூழ்கிய பின்னர் மூன்று கதிர்களைச் சிந்திச்சென்றதென்றும் வேலுருக் கொண்ட அக்கதிர்கள் மூன்றும் முறையே உகந்தை மலை உச்சியிலும் திருக்கோவிலில் ஒரு வெள்ளை நாவல் மரத்தின் மீதும் மண்டூரில் ஒரு தில்லை மரத்தின் மீதும் தங்கியிருந்தன என்றும் அவ்வவ் விடங்களில் வாழ்ந்த மக்கள் (வேடர்கள்) வியப்புடன் நோக்கிக் கொத்துப் பந்தர்களால் ஆலயம் அமைத்து வழிபட்டனர் என்று கூறப்படுகிறது.

திருக்கோவிலில் வேடர்களால் இலை குழைகளைக் கொண்டு முருகனுக்கு அமைக்கப்பட்டிருந்த கோயிலைத் தமிழரின் இரண்டாம்படை எழுச்சியின்போது, வந்த சோழநாட்டு மன்னர் எழுவர் கல்லினாற்கட்டி முடித்தனரென்றும் வேடரது பந்தருக்குள் வடக்கு முகமாக வீற்றிருந்த வேலானது புதிய கற்கோயிலுட் கிழக்கு முகமாகத் திரும்பிவிட்ட காரணத்தினால் திருக்கோவில் (திரும்பிய கோவில்) என்று பெயரிட்டார் என்றும் திருக்கோவில் பற்றிய பதிகம் ஒன்று கூறும்.

திருக்கோவிலின் பழைய பெயர் நாகர்முனை என்றும் கோவில் அமைக்கப்பட்ட பின்னர் அக்கோவில் சிறப்பால் இடப்பெயரும் 'திருக்கோவில்' என மாறிற்று என்றும் அறிகிறோம்.

திருக்கோவிலுள்ள கல்வெட்டுக்களும் பட்டயங்களும் அதன் வரலாற்றைத் துல்லியமாக எடுத்துக்கூறவல்லன.

**வன்னிமை வரலாறு...**

அக்காலத்தில் கல்முனை கரவாகுபற்று தொடக்கம் பாணமை உகந்தை வரை வன்னிமை ஆட்சிக்காலம் நிலவியது.

அக்காலத்தில் எமது பிரதேசங்களைக் காலத்திற்குக் காலம் பல சிற்றரசர்கள் ஆட்சி புரிந்துள்ளார்கள். கிழக்கில் ஒவ்வொரு பிரதேசங்களையும் ஆளுகையாகக் கொண்டு பல சிற்றரசர்கள் ஆட்சி புரிந்துள்ளார்கள் என்பதற்கு பல்வேறு சான்றுகள் இருக்கின்றன. அந்தவகையில், கல்முனை கரவாகுப்பற்று தொடக்கம் அன்றைய நாகர்முனை என அழைக்கப்பட்ட இன்றைய திருக்கோவில் மற்றும் பாணமை உகந்தை வரை கல்முனையில் பழம்பெரும் கிராமமான நற்பிட்டிமுனையை மையமாகக் கொண்டு வாழ்ந்த இரு வன்னிமை சிற்றரசர்கள் பரிபாலித்து வந்துள்ளனர்.

நற்பிட்டிமுனையில் வாழ்ந்த வன்னிமை சிற்றரசர்களான சத்துருகப்போடி சின்னத்தம்பி (பதவிக் காலம் 1902), சின்னத்தம்பி செல்லையா (பதவிக் காலம் 1908 இலிருந்து) ஆகிய இருவருக்கும் அன்று பிரிட்டிஸ்காரர்கள் வழங்கிய அதிகாரம் தொடர்பான நியமனம் மற்றும் சிற்றரசர்களாக இருந்து அவர்கள் ஆற்றவேண்டிய பணிகள் பற்றிய வரலாற்று ஆவணம் இன்றும் பாதுகாக்கப்பட்டுவருகின்றது.

இவர்களின் பரம்பரையினர் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். ஆலயத்தைப் பரிபாலித்து வருகின்றனர்.

இது பாரம்பரியமாக மரபுரீதியாக நிர்வாகக் கட்டமைப்பைக் கொண்டுள்ளது.

செல்லையா வன்னிமை என்பார் சந்ததியே தலைமைப் பதவியை வகிக்க கூடியவர்கள் ஆவர். இது ஆலய யாப்பிலும் எழுதப்பட்டுள்ளது.

இங்குள்ள யாப்பு 1952ஆம் ஆண்டு எழுதப்பட்டவையாகும். அதற்கு முன்பு எழுதப்படாத யாப்பின் பிரகாரம் ஆலயம் நிருவகிக்கப்பட்டுவந்தது.

1952 இவ் முகாந்திரம் ச.வ.செல்லையா வன்னிமை தலைமையில் இவ் யாப்பு எழுதப்பட்டது.

அதன்படி, 05 பேர் கொண்ட பஞ்சாயத்துச்சபை இருக்கும். அச்சபையில் தலைவர் செயலாளர் கணக்குப்பிள்ளை வண்ணக்கர் மற்றும் பொருளாளர் இருப்பார்கள்.

அதில், தலைவராக வன்னிமை பரம்பரையைச் சேர்ந்தவர் இருப்பார். அவர் கரைவாகுப்பற்று, நற்பிட்டிமுனைப் பகுதியைச் சேர்ந்தவர். யாப்பின்படி, பெண்ணடி வம்சவரன் முறைப்படி தெரிவாவர். செயலாளர் மற்றும் கணக்குப்பிள்ளை ஆகியோர் அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். வண்ணக்கர் மற்றும் பொருளாளர் தம்பிலுவில்லைச் சேர்ந்தவராக இருப்பார்கள்.

அத்துடன், வட்டாரப் பிரதிநிதிகள் 20 பேர் இருப்பார்கள். இது நியதி.

இதேவேளை, 28.12.1952 மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தொடரப்பட்டது. அப்போதைய நீதிபதி என்.குணவர்த்தன முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, வழக்கு சமரசமாக தீர்த்து வைக்கப்பட்டது.

அதன்படி, ஆடி அமாவாசைத் தீர்த்தம் முடிவடைந்து மறுநாள் பஞ்சாயத்துச்சபை தெரியவேண்டும் எனவும் அதிலே வட்டாரப் பிரதிநிதிகளும் தெரிவாகவேண்டுமென்று தீர்ப்பளிக்கப்பட்டது.

தலைவரானவர் கரைவாகுப்பற்று வன்னிமையின் செல்லையா வம்சத்து வம்சவரன் முறையிலமைதல் வேண்டும். அக்காலத்தில் செல்லையா வன்னிமை 05 ஆலயங்களைத் தனியாக நிர்வகித்து வந்தார்.

பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயம், பாண்டிருப்பு மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் ,நற்பிட்டிமுனை பிள்ளையார் ஆலயம், சேனைக்குடியிருப்பு காளி ஆலயம் மற்றும் திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயம் என்பனவே அவை.

அதன்பின்பு, காலநேர வர்த்தமான சூழலுக்கு அமைய வன்னிமை வம்சவரன் முறையில் வந்தவர்கள் இவ்வாலயங்களைப் பரிபாலித்துவருகின்றனர்.

1952ஆம் ஆண்டு யாப்பின் பிரகாரம், முதல் பஞ்சாயத்துச்சபை தெரிவானது.

தலைவராக முகாந்திரம் ச.வ.செல்லையா

செயலாளராக சி.மானாகப்போடி

வண்ணக்கராக ஆ.தங்கராசா

பொருளாளராக க.ஆறுமுகம் கணக்குப் பிள்ளையாக க.கந்தையா ஆகியோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்கள்.

வட்டாரப் பிரதிநிதிகள் 30 வட்டாரங்களுக்கு தெரிவாக வேண்டுமென்று நீதிமன்று கட்டளையிட்டதால் பின்வருவோர் தெரிவானார்கள்.

பாணமை எஸ்.டி.எம்.றெட்டறாள், பொத்தவில் எஸ்.குணரெட்ணம் கோமாரி, கி.வ.வி.வன்னமணி, தமிபிலுவில் என். தம்பிராசா, தம்பட்டை கா.கு.தில்லைக் குருக்கள், பனங்காடு க.தோ.குருநாதபிள்ளை, கோளாவில் க.வ.வி.கந்தவனம், அக்கரைப்பற்று அ.பூபாலபிள்ளை, பனையடிப்பிட்டி தோ.செ.சீனித்தம்பி, நிந்தவூர் த.பொ.த.கணபதிப்பிள்ளை,

காரைதீவு செ.பொன்னையா, சம்மாந்துறை தெ.சிவஞானம், மல்வத்தை சி.சி.த.செல்லத்துரை, மல்லிகைத்தீவு நா.நாதபிள்ளை உடையார், சவளக்கடை இ.சத்துருக்கப்போடி, மகிளூர் தெ.பொன்னையா, சாய்ந்தமருது க.ப.சீனித்தம்பிப் போடியார், கல்முனை கு.சிவஞானம், நாற்பட்டிமுனை க.வ.இரத்தினசிங்கம், பாண்டிருப்பு ந.பாலிப்போடி, எருவில் சோ.உ.எதிர்மன்னசிங்கம், கோயில்போரதீவு சா.வ.வி.சின்னவப்போடி, பெரியபோரதீவு க.வ.வி.இளையதம்பிப்போடி, பெரியநீலாவணை பொ.த.கனகசூரியம், வெல்லாவெளி க.சுப்பிரமணியம், பழுகாமம் க.காசுபதி, களுதாவளை கி.கி.த.தம்பியப்பா, அம்பாறை சி.உ.சீவரெத்தினம், நாவற்குடா ந.நொ.செல்லத்துரை, திருக்கோவில் பிரதேசத்திற்கு உறுப்பினரைத் தெரிவு செய்ய அவ்வூர்ப் பிரதிநிதிகள் மறுத்து விட்டனர். காரணம், கேட்டதற்கு மகாசபையிலுள்ள காரியதரிசிப் பதவியை திருக்கோவிலுக்குத் தர வேண்டுமெனக் கேட்டனர்.

சபையோர் அதற்கு மறுப்புத் தெரிவிக்க வன்னிமையோ தேவையானால் உப காரியதரிசி என்ற பதவியைத் தரலாமென்றார். அதற்கும் அவர்கள் சம்மதிக்கவில்லை.

அப்போது 30 வட்டாரப் பிரதிநிதிகளும் 05 பஞ்சாயத்துசபைப் பிரதிநிதிகளும் மொத்தமாக 35 பேர் அதிகாரசபையாக இயங்கிவந்தனர். அதுவே ஆலயத்தைப் பரிபாலித்த வந்தனர்.

கூட்டம் கூடுவதானால் 18 பேர்கொண்ட கோரம் இருக்க வேண்டும். யாப்புத் திருத்தம் செய்ய வேண்டுமெனின் மூன்றிலிரண்டு பெரம்பான்மை ஆதரவு வேண்டும். பின்பு இது நான்கில் மூன்று என மாற்றப்பட்டது.

பின்பு 1972களில் தம்பிலுவில் திருக்கோவில் போட்டி மீண்டும் தலைதூக்கியது. அவர்களுக்குச் செயலாளர் பதவி வேண்டுமென்பதே அதற்கான காரணமாகும்.

இறுதியில் அக்கரைப்பற்றுக்குரிய செயலாளர் பதவியை அவர்கள் திருக்கோவில் மக்களுக்காக உவந்தளித்தார்கள். அதனால் திருக்கோவில் பிரச்சினை தீர்ந்தது.

அதற்காகப் புதிதாக உபதலைவர் பதவியொன்று உருவாக்கப்பட்டு அது அக்கரைப்பற்றுக்கு வழங்கப்பட்டது.

1972களின் பின்னர் மகாசபையிலுள்ள செயலாளர் பதவி திருக்கோவிலுக்கு வழங்கப்பட்டுவருகிறது.தற்போது அப்பதவியைத் திருக்கோவிலைச் சேர்ந்த ஓய்வு நிலை உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.செல்வராஜா அலங்கரிக்கிறார்.

அதனால் 1972க்கு பின்னர் மகாசபையானது 06 உறுப்பினர்களோடு இயங்கிவருகிறது. வட்டாரப்பிரதிநிதிககள் 30 இலிருந்து 20ஆகக் குறைந்துள்ளது. ஏனெனில் சில வட்டாரங்கள் சரிவர இயங்காமல தாமாகவே தமது உறுப்புரிமையை இழந்துள்ளனர். எஞ்சியவர்களுக்குத் திருவிழாச் செய்யும் கௌரவமும் வழங்கப்பட்டுள்ளது.

**சமகால நிர்வாகம்...**

தற்போது மகாசபை உறுப்பினர்கள் 06 பேர் வட்டாரப்பொறுப்பாளர்கள் 20 பேர். மொத்தமாக 26 பிரதிநிதிகள் ஆலயத்தைப் பரிபாலித்து வருகின்றனர்.

தற்போதுதியங்கும் புதிய நிர்வாகசபை தலைவராக சுந்தரலிங்கம் சுரேஸ் (வன்னிமை வம்சவரன் - நற்பிட்டிமுனை) வண்ணக்கராக வன்னியசிங்கம் ஜெயந்தன் (தம்பிலுவில்) செயலாளராக அ.செல்வராஜா (திருக்கோவில்) உபதலைவராக க.சபாரெட்ணம் (அக்கரைப்பற்று) பொருளாளராக கொ.கிருஸ்ணமூர்த்தி (தம்பிலுவில்) கணக்குப்பிள்ளையாக இ.லோகிதராஜா (அக்கரைப்பற்று) ஆகிய அறுவரும் மகாசபை பிரதிநிதிகளாவர்.

இதைத்தவிர, 20 வட்டாரப் பிரதிநிதிகள் பொத்துவில் முதல் எருவில் ஈறாகவுள்ள தமிழ்க் கிராமங்களைப் பிரதிபலிப்போராகவுள்ளனர்.

ஆலய வழக்கொன்று பொத்துவில் நீதிமன்றில் செல்கிறது.

ஆலய பொக்கிச அறைக்கு மூன்று திறவுகோல்கள் இருத்தல் வேண்டும் என்றும் அவை வண்ணக்கர் பொருளாளர் கணக்குப்பிள்ளை ஆகியோர் ஒவ்வொருவரிடமும் இருத்தல் வேண்டும் என்று 1952ஆம் ஆண்டின் யாப்பு கூறுகிறது.

ஆலய பிரதமகுருவாக பல்லாண்டுகாலம் பிரம்ஸ்ரீ. நீதிநாதக்குருக்கள் பணியாற்றிவந்தார். அவராது மறைவின் பின்னர் அவரது மருகர் பிரபல சிவஸ்ரீ.சண்முக மகேஸ்வரக்குருக்கள், மகன் சிவஸ்ரீ. அங்குசநாதக் குருக்கள் போன்றோர் பூஜை புனஸ்காரங்களை சிறப்பாக நடாத்திவருகின்றனர்.

இறந்தோர்க்கான பிதிர்கடன் செலுத்துதலுக்கு உகந்த திருக்கோவில் ஆடி அமாவாசைத் தீர்த்தமானது கிழக்கு மக்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இதேபோன்று, பிதிர்கடன் செலுத்துதலுக்கு (கிழக்கில்) மட்டக்களப்பு-அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையாரின் தலமும், ஆடி அமாவாசைத் தீர்த்தமும் முக்கியத்துவம் பெறுகின்றது.

பிதிர்க்கடன் செலுத்துவோர் இத்தகைய ஆலயங்களை நாடி தமது கடன்களை நிறைவேற்றி வருவதும் பாரம்பரிய நடைமுறையே.

எனவே, இத்தகைய சிறப்பு பெற்ற திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமியின் அருள் பெற்று வாழ்வில் உய்வோமாக!

கொங்கோவில் இடம்பெற்ற தாக்குதலில்

# இராணுவத்தினர் உட்பட 70 பேர் பலி

கின்ஷா

மத்திய ஆபிரிக்கா நாடான கொங்கோவில் போராட்டக்காரர்களின் தாக்குதலில் இராணுவத்தினர் உட்பட 70 பேர் பலிகியுள்ளதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொங்கோ தலைநகர் கின்ஷாசாவில் உள்ள கின்செல் கிராமத்தில் கடந்த சில ஆண்டுகளாக இரண்டு சமூகங்களுக்கும் இடையே மோதல் நடந்து வருகிறது.

நில உரிமைகள் மற்றும் அப்பகுதியின் வரலாற்று குடிமக்கள் மற்றும் கொங்கோ ஆற்றின் அருகே குடியேறிய யக்கா உள்ளிட்ட பல்வேறு இனங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு இடையே நில உரிமைகள் தொடர்பாக பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளது.



இந்நிலையில், கடந்த ஏப்ரல் மாதம் கொங்கோவின் ஜனாதிபதி பெலிக்ஸ் சிசெகெடி முன்னிலையில் போர் நிறுத்தம் ஒப்புக் கொள்ளப்பட்ட போதிலும், இரு சமூகங்களுக்கிடையில் மோதல்கள் தொடர்ந்து தீவிரமடைந்துள்ளன.

கொங்கோ இராணுவம் வன்முறையை அடக்குவதில் தோல்வியடைந்தது. இதையடுத்து, கொங்கோ கிழக்கில் போராளிகள் ஆயுதங்களுடன் போரிட்டு வரும் நிலையில், நாட்டின் மேற்கு பகுதியிலும் வன்முறை தீவிரமடைந்துள்ளது.

இந்த தாக்குதலில் 9 இராணுவ வீரர்கள் உட்பட 70 பேர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.



மில்வாகீ

அமெரிக்க துணை ஜனாதிபதி வேட்பாளரின் மனைவி

# இந்திய வம்சாவளி பெண்?

அமெரிக்க துணை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் குடியரசு கட்சி வேட்பாளர் ஜே.டி.வான்சின் மனைவி இந்திய வம்சாவளி பெண் என்பது அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 5ஆம் திகதி நடைபெற உள்ளது. இதில் ஜனநாயக கட்சி வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி பைடனும், குடியரசு கட்சி வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப்பும் போட்டியிடுவது உறுதியாகியுள்ளது.

கடந்த 15ஆம் திகதி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த ட்ரம்ப் மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்ட சம்பவம் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் களத்தை பரபரப்பாக்கியுள்ள நிலையில், குடியரசு கட்சியின் தேசிய மாநாடு விஸ்கான்சின் மாகாணம் மில்வாகீ நகரில் நடைபெற்றது.

இதில் ஜேம்ஸ் டேவிட் வான்ஸ் (39) பெயரை அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் துணை ஜனாதிபதி வேட்பாளராக டிரம்ப் அதிகாரப்பூர்வமாக அறிவித்தார்.

கடந்த 2022இல் அமெரிக்க செனட்டுக்கு தேர்வு செய்யப்பட்ட ஜே.டி.வான்ஸ் ஆரம்பத்தில் ட்ரம்ப்பின் பல்வேறு சட்டங்களை எதிர்ப்பவராக இருந்த நிலையில் பின்னர் ட்ரம்ப்பின் தீவிர ஆதரவாளராக மாறியது குறிப்பிடத்தக்கது.



பெய்ரூட்

# லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல்

காசா முனையில் செயல்பட்டு வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர்.

மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசாமுனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது. இதையடுத்து, ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் ஒப்பந்த அடிப்படையில், பணய கைதிகள் 100க்கும் மேற்பட்டோரை மீட்டுள்ளது.

ஆனால், 100க்கும் மேற்பட்டோர் இன்னும் பணய கைதிகளாக ஹமாஸ் பிடியில் உள்ளதாகவும், அதில் சிலர் உயிரிழந்திருக்கலாம் எனவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

மேலும், காசாவில் இஸ்ரேல் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த போரில் காசாவில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் உட்பட 37 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அதேபோல், மேற்குகரையில் ஏற்பட்ட மோதலில் 500க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். காசா முனையில் இஸ்ரேல் படையினரும் 300க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே, இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரில் ஹமாஸ் ஆயுதக்குழுவினருக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்களும், லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா பயங்கரவாதிகளும் ஆதரவு அளித்து வருகின்றனர். இந்த ஆயுதக்குழுக்கள் இஸ்ரேல் மீது அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்த தாக்குதலுக்கு இஸ்ரேல் தக்க பதிலடி கொடுத்து வருகிறது.

இந்நிலையில், தெற்கு லெபனானின் கபீர் டீப்நைட் பகுதியில் உள்ள உம் தூட் என்ற கிராமத்தில் இஸ்ரேல் விமானப்படையினர் நேற்று அதிரடி தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 5 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்த 5 பேரில் மூவர் குழந்தைகள் எனவும் அவர்கள் அனைவரும் சிரியாவை சேர்ந்தவர்கள் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

மகாராஷ்டிரா

திருடனின் செயலால்

# நெகிழ்ந்த தம்பதி



மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்தவர் புகழ்பெற்ற எழுத்தாளர் கவிஞர் நாராயண் சுர்வே. இவர் மும்பை தெருக்களில் ஆதரவற்ற சிறுவனாக இருந்து பின்னாளில், பிரபல எழுத்தாளராகவும், கவிஞராகவும் மாறியுள்ளார்.

இவரது வீடு, ராய்காட் மாவட்டம் நேரல் பகுதியில் உள்ளது. இவர் கடந்த 2010ஆம் ஆண்டு தனது 84ஆவது வயதில் வயது முதிர்ச்சி காரணமாக உயிரிழந்தார். தற்போது அவரது வீட்டில் மகள் சுஜாதா, கணவர் கணேஷ் காரேவுடன் வாழ்ந்து வருகிறார்.

இந்த நிலையில், தம்பதியர் இருவரும் கடந்த 10 நாட்களுக்கு முன்பு வீட்டை பூட்டிவிட்டு விராரில் உள்ள மகன் வீட்டுக்கு சென்று விட்டனர். ஒரு வாரமாக வீடு பூட்டியிருப்பதை நோட்டமிட்ட திருடன் ஒருவன், பூட்டை உடைத்து வீட்டுக்குள் புகுந்து டி.வி. உள்ளிட்ட பொருட்களை திருடிச் சென்றுள்ளான்.

இதையடுத்து, மறுநாள் மீண்டும் அதே வீட்டில் மிச்சம் மீதி இருப்பதை திருட வந்த திருடன், வீட்டில் பிரபல எழுத்தாளர் நாராயண் சுர்வேவின் புகைப்படம் இருப்பதை பார்த்துள்ளான். அப்போதுதான், அது பிரபல கவிஞரின் வீடு என்பது தெரியவந்தது.

பிரபல கவிஞரின் வீட்டில் திருடிவிட்டோமே என்ற குற்ற உணர்ச்சியில், வீட்டில் திருடிய பொருட்களை மூட்டை கட்டி மீண்டும் கவிஞரின் வீட்டில் கொண்டு வந்து வைத்த திருடன், அதோடு ஒரு துண்டு சீட்டில் மன்னிப்பு கடிதம் ஒன்றையும் எழுதி சுவரில் ஒட்டிச் சென்றுள்ளான்.

அந்தக் கடிதத்தில், 'மிக உயர்ந்த எழுத்தாளர், கவிஞர் வீட்டில் திருடியதற்காக என்னை மன்னித்துவிடுங்கள்' என்று குறிப்பிட்டிருந்தான்.

இதனையடுத்து, வெளியூர் சென்ற தம்பதியர், வீட்டிகிற்கு வந்த போது திருடன் எழுதி வைத்திருந்த மன்னிப்பு கடிதத்தை பார்த்து நெகிழ்ச்சியடைந்துள்ளனர்.

# இரஜவலை விதுஷன் தங்கம் வென்றார்

'Junior national 2024' போட்டி, மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் கடந்த 13,14 மற்றும் 15 ஆகிய தினங்களில் நடைபெற்றது.

இதில், திகன இரஜவலை இந்து கல்லூரி மாணவன் ஆர்.விதுஷன் 2,000 மீட்டர் தடை தாண்டல் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தை பெற்று தங்கப்பதக்கத்தை தனதாக்கிக்கொண்டார். அதே கல்லூரியைச் சேர்ந்த H.அபினேஷ் 1,500 மீட்டர் போட்டியில் மூன்றாம் இடத்தை பெற்று வெண்கல பதக்கத்தை தனதாக்கிக்கொண்டு, கல்லூரிக்கு பெருமையைச் சேர்த்துள்ளனர்.





பாகிஸ்தானில் நடைபெறவிருக்கும் 14ஆவது தெற்காசிய போட்டிகளில் R.விதுஷன் கலந்து கொள்ளவுள்ளார். இந்த போட்டிகள் 2025 பெப்ரவரியில் முதலாம் அல்லது 2ஆம் திகதிகளில் ஆரம்பமாகி, 12ஆம் திகதி வரையிலும் நடத்த மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் பெரும்பாலான செயல்பாடுகள் நாட்டின் மிகப்பெரிய இரண்டு நகரங்களான இஸ்லாமாபாத் மற்றும் லாகூரில் நடத்தப்படும், லாகூருக்காக 18 நிகழ்வுகளும் இஸ்லாமாபாத்திற்கு ஒன்பது நிகழ்வுகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இங்கிலாந்து முகாமையாளர் பதவியிலிருந்து

# இராஜினாமா செய்த சௌத்கேட்



இங்கிலாந்து சர்வதேச கால்பந்தாட்ட அணியின் முகாமையாளர் பதவியிலிருந்து கரெத் சௌத்கேட் இராஜினாமா செய்துள்ளதாக அந்நாட்டு கால்பந்தாட்டச் சங்கம் செவ்வாய்க்கிழமை (16) உறுதிப்படுத்தியுள்ளது.

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் யூரோ கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் ஸ்பெய்னிடம் இங்கிலாந்து தோற்ற நிலையிலேயே இவ்வறிப்பு வெளிவந்துள்ளது.

சௌத்கேட்டின் ஒப்பந்தமானது இவ்வாண்டு டிசெம்பர் மாதம் முடிவடையவிருந்தபோதும் அவரை 2026ஆம் ஆண்டு சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளன உலகக் கிண்ணத் தொடர் வரையில் சங்கம் விரும்பியிருந்ததாகக் கூறப்பட்டிருந்தது.

எட்டாண்டுகளாக இங்கிலாந்தின் முகாமையாளராக இருந்த சௌத்கேட் 102 போட்டிகளுக்கு பொறுப்பாக இருந்து 2016ஆம் ஆண்டிலிருந்து 2018 உலகக் கிண்ண அரையிறுதி, 2020 யூரோ இறுதிப் போட்டி, 2022 உலகக் கிண்ண காலிறுதிப் போட்டிகளுக்கு அழைத்துச் சென்றிருந்தார்.

# 'Kish விவேகன்ஸ் ப்றீமியர் லீக் 2024"

சுரேஸ் குமார்

கொழும்பு-விவேகானந்தா கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள ' Kish விவேகன்ஸ் ப்றீமியர் லீக் 2024" கிரிக்கெட் போட்டி, கொழும்பு முவர்ஸ் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (21) காலை 8 மணி முதல் நாள் முழுவதும் நடைபெறவுள்ளது.

பழைய மாணவர்களுக்கு இடையில் நடைபெறும் அணிக்கு அறுவர் கொண்ட மாபெரும் மென்பந்து கிரிக்கெட் போட்டியில் மொத்தமாக நான்கு குழுக்களின் கீழ் 21 அணிகள் பங்கேற்கின்றன.

'ஏ' குழுவில் நியூ செட்டி செலஞ்சர்ஸ், கொழும்பு ஸ்மேஸ் கிங்ஸ், ஜெம்பட்டா ஸ்ட்ரைக்கர்ஸ், கொட்டஹேன சுப்பர் கிங்ஸ், எலகந்த ஜே.டி போய்ஸ் ஆகிய ஐந்து அணிகளும் விளையாடுகின்றன.

'பி' குழுவில் ரட்ணம் செலஞ்சர்ஸ், தமிழ் நாடு லயன்ஸ், கிரான்ட்பாஸ் ஸ்ட்ரைக்கர்ஸ், ஜிந்துப்பிட்டி விவேகன்ஸ், கொச்சிக்கடை கோப்ராஸ் ஆகிய ஐந்து அணிகளும் விளையாடுகின்றன.

'சி' குழுவில் புளுமெண்டல் கவாலியர்ஸ், சங்கமித்த ஸ்ட்ரைக்கர்ஸ், வத்தளை சாணக்கியன்ஸ், தெமட்டகொடை நைட்ரைடர்ஸ், ஆர்மர் தண்டர்ஸ் ஆகிய ஐந்து அணிகளும் விளையாடுகின்றன.

'டி' குழுவில் கொழும்போ வொரியர்ஸ், கதிரேஷன் வெஸ்டர்ன் சிசி, பெற்றா டைட்டன்ஸ்,பம்பா ஸ்ட்ரைக்கர்ஸ், வாசல ஸ்மேசர்ஸ், மோதர சேச்சர்ஸ் ஆகிய ஆறு அணிகளும் பங்குபற்றுகின்றன.

ஒவ்வொரு குழுவிலும் முதல் இரண்டு இடங்களை அணிகளை பெறும் இடங்களை கால் இறுதிக்கு தகுதி பெறும். அதனைத் தொடர்ந்தும் மாபெரும் இறுதிப் போட்டியும் நடைபெறவுள்ளது.

சம்பியன் கிண்ணத்தை வெல்லும் அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் ஒரு இலட்சம் ரூபாய் பணப் பரிசும், இரண்டாம் இடத்தைப் பெறும் அணிக்கு கிண்ணத்துடன் ஐம்பதாயிரம் பணப்பரிசும், மேலும் பல பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

மகளிருக்கான சிறப்பு கிரிக்கெட் போட்டி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுதவிர சிறுவர்களுக்கான விளையாட்டுப் பகுதிகள், ஐஸ் கிறீம் கார்னிவல் (சிறுவர்களுக்கு இலவசம்) Food stall உட்பட மேலும் பல பொழுது போக்கு அம்சங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மல்யுத்தம்:

# முதலாம், இரண்டாமிடங்களைப் பெற்ற முள்ளியவளை வித்தியானந்தா

நடராசா கிருஷ்ணகுமார்

வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மல்யுத்தப் போட்டியில் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி ஆண்கள் பிரிவு முதலாமிடத்தையும் பெண்கள் பிரிவு இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளனர்.





முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவட்ட உள்ளக அரங்கில் சனிக்கிழமை (13) நடைபெற்று முடிந்த இப்போட்டியில், வித்தியானந்த கல்லூரி சார்பாக பங்குகொண்ட ஆண் மாணவர் ஆறு தங்கம், இரண்டு வெள்ளிப் பதக்கங்களையும் பெற்றுள்ளனர். மாணவிகள் இரண்டு தங்கம், இரண்டு வெள்ளி பதக்கங்களையும் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

ஆண்களில் எஸ்.மதீஷன், ஜெ.கஜந்த், ஜெ.வினோஜன், பி.பிரியங்கன், ஏ.ரஞ்சிதன், கே.விபுர்ஜன், கே.சனுஜா, கே.திலக்ஷிகா ஆகியோர் தங்கப் பதக்கங்களையும் எஸ்.இசைமதி, வி.ஜெனனி, எஸ்.கோதீஷன், வி.சுடர்நிலவன் ஆகியோர் வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 18, ஜூலை 2024, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.